**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைளிற்குரிய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு

செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய தொடர்புடைய நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 (LKAS 01) இன் 32 பந்தி பிரகாரம் ஏதேனும் நியமம் ஒன்றின் தேவைபாட்டிற்கு ஏனும் அனுமதி வழங்கியிருந்தால் அன்றி எந்த ஒரு சொத்தை அல்லது பொறுப்பை ஒன்றிற்கு ஒன்றை பதிலீடு செய்யக் கூடாது. எவடவாறாயினும், மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 117,473,259 ஆன பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றில் ரூபா 10,491,746 ஆன மேலதிக பற்றொன்று குறிப்பிட்டதனால் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை அப் பெறுமானத்தால் குறைத்தும், வங்கி மேலதிக பற்று நடைமுறை பொறுப்பினுள் குறிப்பிடப்படாததால் மொத்த நடைமுறை பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் குறைத்தும், குறிப்பிடப்பட்டுள்ளது. | எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது LKAS 32 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்கி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 49(a) பந்தி பிரகாரம் முன்னைய காலப் பகுதிக்கான தவறுகளை சரி செய்யும் போது அந்த தவறுகளின் தன்மையை குறிப்பின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளிற்குரியதாக செய்யப்பட்டுள்ள ரூபா 1,918,370 ஆன மீள்மதிப்பீட்டு செம்மையாக்கல் ஒன்று மற்றும் ரூபா 132,990,179 ஆன வருமான வரி செம்மையாக்கல் தொடர்பாக குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமம் பிரகாரம் குறிப்புகள் மூலம் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க முன்னைய காலப் பகுதியின் தவறுகளை சரி செய்யும் போது அந்த தவறுகளின் தன்மையை குறிப்பு மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்க 36 இன் 10 (a) பந்தி பிரகாரம் பயன்படுத்தப்படாத உருவமற்ற சொத்துக்கள் தொடர்பாக வருடாந்தம் நட்டஇழப்பு பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 1,573,932 பெறுமதியான கணனி மென்பொருள் தொகுதியொன்று பயன்படுத்தப்பட முடியுமான நிலையில் காணப்படாத போதும், அந்த சொத்திதுக்காக நட்டஇழப்பு தொடர்பாக பரீட்சித்து இருக்கவில்லை. | எதிர்காலத்தில் LKAS 36 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க வருடாந்த நட்ட இழப்பு தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலவசமாக வழங்கியிருந்த ரூபா 2,019,710 பெறுமதியான புத்தக அன்பளிபை செலவொன்றாக கணக்கீடு செய்திருக்காத காரணத்தால் செலவு அந்த அளவால் குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதுடன் இலாபமும் அந்த அளவால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அனைத்து கூற்றுக்களினதும் பெறமதி வெறிதாக்கப்பட்டுள்ள தாக மற்றும் கணக்கீடு செய்வதற்கு இந்த இருப்பு உரித்தற்றதென. | அன்பளிப்பை செலவொன்றாக கணக்கீடு செய்ய வேண்டடும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வைப்பு பெறுவனவு | 2,304,086 | வைப்புகளை உறுதி செய்துகொள்ள சான்றிதழ்கள் அல்லது உதவி ஆவணங்கள் | இந்த மீதிகள் 2024 சனவரி 01 திகதிக்கு முன்னரிலிருந்து நிலவி வரும் மீதிகளாகவும் இனங்காண நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்வதற்காக உரிய சான்றுகளை பேணிக் கொள்ள வேண்டும். |

## 1.6 கணக்கீட்டு பெறவேண்டியவைகள் மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய லொத்தர் சபையினால் அனுப்பிய மீதி உறுதிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்படுனர் மீதி ரூபா 164,056,839 ஆனதுடன் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் அந்த கடன்படுனர் பெறுமதி ரூபா 271,259,608 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. வித்தியாசமான ரூபா 107,202,769 ஆன பெறுமதியை இணக்கம் செய்து மீதியை தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த பெறுமதிகள் தற்பொது கட்டங்களாக தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதென. | கடன்படுனர் மீதியை விரைவில் தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் கடன்படுனர் மீதி ரூபா 618,417,892 ஆனதுடன் அந்த மொத்த கடன்படுனர் மீதியில் ரூபா 477,425,985 ஆன வியாபார கடன்படுனர் மீதிகளிற்குரிய மீதி உறுதிப்பாடு கிடைத்திருந்ததானது ரூபா 271,259,608 இற்கான வியாபார கடன்படுனர் பெறுமதிக்கு மாத்திரமே ஆகும். அதுபோன்றே இந்த மொத்த வியாபார கடன் மீதியினுள் 4 - 10 ஆண்டுகளிற்கிடையிலான கால விச்சளவிலிருந்து நிலவி வரும் ரூபா 169,009,992 ஆன கடன்படுனர் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்திக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட முடியாக் கடன் தொடர்பாக அறவிட அல்லது கடனை பதிவழிக்க நடவடிக்கை எடுப்படுவதென. | கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ).இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் | பற்றாக்குறை மற்றும் திருட்டு தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்பட வேண்டிய போதும் ரூபா 1,0227,793 ஆன உதிரிப் | ஏற்பட்டுள்ள இருப்பு பற்றாக்குறை தொடர்பாக கூட்டுத்தாபன உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாக விசாரணை ஒன்றை | நிதி பிரமாணம் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் காணாமல் போனமை |

| | | | |
|---|---|---|---|
| 757 (2) | பாகங்கள் மற்றும் வன்பொருள் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக அவவாறு செயற்பட்டிருக்கவில்லை. | ஆரம்பித்துள்ளதாக மற்றும் கணக்காய்வு விசாரணையின் பரிந்துரை பிரகாரம் முன்நடவடிக்கை எடுப்பதென. | தொடர்பாக செயற்பட வேண்டும். |
| (ஆ) 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED 01/2021 கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழகாட்டிக் கோவையின் 3.2 (v) அத்தியாயம் | கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் செயலாற்றுகை மதிப்பீடு செய்யக் கூடியவாறு ஊக்குவிப்பு உத்தேச திட்டத்தை தயாரித்து பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு அங்கீகாரமின்றி 2023 ஆண்டில் ரூபா 52,572,803 உம் 2024 ஆண்டில் ரூபா 43,651,293 ஆன தொகையை ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு மேலதிகமாக 2024 ஆண்டில் ஊழியர் ஊக்கத்தை உயர்த்தும் நோக்கில் ஊக்குவிப்பு படிகளாக ஒரு ஊழியரிற்கு ரூபா 25,000 விதம் 478 ஊழியர்களிற்கு ரூபா 11,950,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபன ஊழியர்களிற்கு 2024 ஆண்டு சிங்கள புத்தாண்டிற்காக ஏதேனும் நலன்புரியை செய்யும் நோக்கில் மற்றும் ஊக்கப்படுத்தும் நோக்கில் கூட்டுத்தாபன சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களிற்கு நலன்புரி தொடர்பாக குறைந்த வசதிகள் காணப்படுவதால் அது தொடர்பாக கவனத்திற் கொண்டு ஊக்கப்படுத்தல் படியொன்றாக இந்த படியை ஏப்ரல் மாதத்தில் செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதென. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 வரித்தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் நடைமுறை பொறுப்பின் கீழ் செலுத்த வேண்டிய வரியாக தற்போது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் இரத்துச் செய்துள்ள வரி வகையான ரூபா 23,342,409 ஆன பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் ரூபா 80,840,239 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் ரூபா 126,300 ஆன நிறுத்தி வைத்தல் வரி பெறுமதியொன்று தொடர்ந்த 2021 ஆண்டிலிருந்து மாற்றமின்றி நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் இந்த செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரி மீதிகளை தீர்த்துக் கொள்ள உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளதாக வும் பதில் கிடைக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் வரி மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வரி மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 108,306,098 ஆன இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 2,762,141,136 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 2,653,835,038 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் கிடைத்த பாடபுத்தகங்கள் அச்சிடும் கட்டளைகுறைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

2023 ஆண்டின் ரூபா 8,323,244,160 ஆன கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2024 ஆண்டளவில் ரூபா 2,788,555,974 வரை குறைந்திருந்தது. இந்த வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 66 சதவீதமளவில் சரிவடைந்திந்தது. இதற்கு காரணங்களாக கூட்டுத்தாபனத்தினால், பாடபுத்தகங்கள் அச்சிடுவதன் மீது மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு சந்தை தேவைபாட்டை இனங்கண்டு அதற்கு பொருத்தமான வாறு தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படாமை போன்றே விற்பனையை வளர்திக்கொள்ள தேவையான செயற்பாடுகள் எடுக்காததும் பிரதானமாக தாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தேறிய இலாப விகிதமும் 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தினால் அச்சிடப்படும் பரீட்சை வினா தாழ்களை களஞ்சியப்படுத்த இடப்பாடு போதாமையால் 1000 சதுரஅடி அளவான தற்காலிக கூடமொன்றை (Hut) வடகைக்கு எடுத்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் கட்டிடங்களிலுள்ள இடப்பாட்டை பரீட்சிக்கும் போது கண்காட்சி கட்டிடத்தினுள் 2000 சதுரஅடி அளவான பல வருடங்கள் பழமையான பயன்படுத்த முடியாத புத்தகங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு உள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த புத்தகங்களை பொருத்தமானவாறு பாராதீனம் செய்தால் தேவையான இடப்பாட்டை பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்க முகாமைத்துவத்திற்கு இயலாது போனதால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 796,500 ஆன மேலதிக கிரயத்தை செலவிட நேரிட்டிருந்தது. | நடைமுறை சாத்தியமாக கண்காட்சி கட்டிடத்தை பயன்படுத்த முடியாததால் தேவைப்பாட்டின் மீது தற்காலிக களஞ்சியசாலை காகிதாதிகள் தொழிற்சாலைக்கு பக்கத்தில் நிர்மாணித்ததென. | பயன்படுத்த முடியாத பொருட்களை பாராதீனம் செய்து கூட்டத்தாபனத்தின் இடப்பாட்டை பிரயோசனப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2024 ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கிரவன் (crown) பயிற்சி புத்தகங்களை உற்பத்தி செய்துள்ளதுடன் இந்த புத்தகங்கள் 200,000 அச்சிடுவது தொடர்பாக எவ்வித திட்டம் அல்லது சந்தை கணிப்பீடு அல்லது பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அச்சிட்ட புத்தகங்களில் 27 சதவீதம் மாத்திரம் 2024 திசெம்பர் 31 திகதியில் விற்பனையாகி இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் கிரயம் ரூபா 6,119,563 ஆன 48,251 அளவான புத்தகங்கள் விற்பனையாகாது களஞ்சியத்தில் காணப்பட்டன. | எதிர்காலத்தில வட்டத்தை குறைத்து அனைத்து புத்தகங்களையும் விற்பனை செய்ய விற்பனை விரிவினால் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதென. | எஞ்சிய புத்தக அளவை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) கூட்டுத்தாபன மீளாய்வாண்டிற்காக மூலோபாய திட்டத்திற்கமைய விறபனை வருமானம் ரூபா 1014 மில்லியன் இலக்கொன்று திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், விற்பனை பிரிவின் மீளாய்வாண்டு செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 700 மில்லியன் பெறுமதியென மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் உள்ளவாறான விற்பனை வருமானம் ரூபா 289,147,344 ஆனது. அதன் பிரகாரம் விற்பனை பிரிவின் இலக்கை அடைந்து கொள்ள கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. விற்பனை பிரிவின் உப பிரிவொன்றான வெளியீட்டு விரிவிற்காக விற்பனை இலக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் ரூபா 890,841 ஆன வருமானத்தை மாத்திரம் ஈட்டியிருந்தது. மேலும், இந்த பிரிவின் பதவியணியிற்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,365,100 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முகாமைத்துவத்தினால் வெளியீட்டு பிரிவின் உச்ச செயலாற்றுகையை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூலப்பொருட் கிரயம் அதிகரித்ததால் போட்டி விலைகளையும் உயர்த்த நேரிட்டதென. | விற்பனை இலக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.5.1 பந்தி (அ) பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழுவின் அங்கத்தவர்களினது பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்பாவது கருதிக்கொள்ளும் பெறுகைகள் செயற்பாட்டிற்காக நிதி கிடைப்பதனை உறுதிப்படுத்தலாகும். வுழிகாட்டியை கவனித்திற் கொள்ளாது செயற்படுவதால் கூட்டுத்தாபனத்தினால் D/s Art papers மெற்றிக் டொன் 150 இறக்குமதி செய்யும் போது கடற்துறை ஆவணங்களை விடுவித்துக் கொள்ள உரிய நிதிஏற்பாடு இல்லாததால் 2024 செப்டம்பர் 19 திகதி தாமதக் கட்டணமாக தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 332,391 ஆன தொகையையும் மெற்றிக் டொன் 450 கடதாசி கொள்வனவு செய்தலின் தாமதக் கட்டணம் ரூபா 246,152 ஆன தொகையாக கூட்டுத்தொகை ரூபா 578,543 தொகை செலுத்தியிருந்தது. | விடுவிப்பிற்காக ஆவணங்களை சமர்ப்பித்திருந்த போதும் கடற்துரை ஆவணங்களை வங்கியிலிருந்து விடுவித்துக் கொள்ள தாமதமானதால் இந்த கொடுப்பனவு மேற்கொண்டுள்ளதென. | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| ஆ) பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளிற்கு முரணாக 2023 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த, ரூபா 1,400,700 பெறுமதியான 14 ஆன Carbon Vanes இனை உரிய அளவுத்திட்டத்திற்கு இணங்குவதாக உறுதி செய்து கெள்ளாது பொருட்களை கொள்வனவு செய்து 2024 ஆண்டில் திசெம்பர் 31 வரையும், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் நிலவின. | முகாமைத்துவத்தின், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் படி முகவரான்மை நிறுவனத்தினால் கொள்வனவு செய்துள்ளதென. | தேவைபாட்டை இனங்கண்டு உரிய அளவுத்திட்டத்திற்கு இணங்குவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| (இ) பெறுமதி 400 மில்லியனை விஞ்சிய பெறுகைகள் அமைச்சு பெறுகைகள் குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 770,934,430 பெறுமதியான 9 பெறுகைகளை, இரண்டு மாதங்கள் 10 நாட்களான மிகக் சிறிய காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மூலப்பொருள் ஒரே நேரத்தில் கட்டளை இடும்போது நாணயக் கடிதம் திறப்பதற்காக நிதி வசதிகள் மற்றும் தற்போது காணப்படும் மட்டுபடுத்தல்கள் மற்றும் மூலப்பொருள் தேவைபாடு களஞ்சிய வசதிகளையும் கவனத்திற்கொண்டு | அரச பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டளை இட நேர்ந்ததென. | |
| (ஈ) | பல கடதாசி வகைகளில் பெறுகைகளின் போது அவற்றின் மாதிரியொன்றை தொழில்நுட்ப குழுவினால், வழங்குனர்களினால் அனுப்பப்படும் அறிக்கையை மாத்திரம் பரீட்சித்து கொள்வனவு செய்வதற்கு அங்கீகரித்திருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் கடதாசி கிடைத்ததன் பின்னர் தரத்தை மீள் பரீட்சிப்பு செய்திதிருக்கவில்லை. | முழுமையான SGS அறிக்கையொன்று மூலம் உற்பத்தி செய்யும் கடதாசி அளவுத் திட்டங்களுடன் பொருந்துவதாக உறுதிபடுத்திய பின்னர் அக் கடதாசி வழங்கல் மேற்கொள்ளப்படுவதென. | கடதாசி கிடைத்ததன் பின்னர் தரத்தை மீண்டும் பரீட்சிக்க வேண்டும். |